# திருப்பரங்குன்றம் - கவசம்

## குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குக் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

திருப்பருங்குன்றுரை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத்துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப்பொருளே - 4

**வையாபுரியில் மகிழ்ந்து வாழ்பவனே**
**ஒய்யார மயில் மீது உகந்தாய் நமோ நமோ**
**ஐயா குமரா அருளே நமோ நமோ**
**மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ - 8**

பழநியங்கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலிமலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ - 12

**சூரசங் காரா துரையே நமோ நமோ**

**வீரவேலேந்தும் வேளே நமோ நமோ**
**பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ**
**கண்களீராறுடை கந்தா நமோ நமோ - 16**

கோழிக்கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்ரீம் - 20

**வவவ வவவ ஆம் ஹோம்**
**ணணண ணணண வாம்ஹோம்**
**பபப பபப சாம் சூம்**
**வவவ வவவ கௌம் ஓம் - 24**

லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக - 28

**பக பக பக பரந்தாமா வருக**
**வருக வருகவென் வள்ளலே வருக**
**வருக வருக நிஷ்களங்கனே வருக**
**தாயென நின்னிருதாள் பணிந்தேன் எனைச் - 32**

சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்லவிடங்கள் வாராமல் தடுத்து - 36

**நல்ல மனத்துடன் ஞானகுரு உனை**
**வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்**
**இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்**
**கந்தா கடம்பா கார்த்தி கேயா - 40**

நந்தன் மருகா நாரணி சேயே
என்னிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமிநாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர் - 44

**தவக்கதிர்காமம் சார்திரு வேரகம்**
**கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்**
**விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்**
**தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு - 48**

சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தொர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம் - 52

**நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்**
**வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே …**
**உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே**
**வெற்றிக் கொடியுடை வேளே போற்றி - 56**

பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரி அயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரைமாக் கலைகளும் - 60

**தானே நானென்று சண்முகமாகத்**
**தாரணியுள்ளோர் சகலரும் போற்றப்**
**பூரண கிருபை புரிபவா போற்றி**
**பூதலத்துள்ள புண்ய தீர்த்தங்கள் - 64**

ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம் - 68

**எள்ளினுள் எண்ணெய் போலெழிலுடை உன்னை**
**அல்லும் பகலும் ஆசாரத்துடன்**
**சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்**
**எல்லா வல்லமை இமைப்பினில் அருளி** - 72

பல்லா யிரநூல் பகர்ந்தருள்வாயே
செந்தில்நகர் உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே ...
சரணம் சரணம் சரஹணபவ ஓம் - 76

**அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்**
**சரணம் சரணம் சரஹணபவ ஓம்**
**சரணம் சரணம் சண்முகா சரணம்** ... - 79

**குன்றாத குடிவாழ்க்கை தந்தருளும்**
**மயூரகிரிநாதனுக்கு அரோகரா**